2012 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. தங்களது இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண் கொண்ட புறாக் கூண்டு அறை சாவியினை நூலகப் பிரிவு–2இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், B.S.N.L. smart pay phones கருவிகள் பேரவை மண்டபத்தின் மேல்புற மற்றும் கீழ்ப்புறத் தாழ்வாரங்கள், பப்ளிக் பிளாசா, சட்டமன்றப் பேரவை ஆண்கள் மற்றும் பெண்கள் உறுப்பினர்களின் ஓய்வறைகள், தி.மு.க. சட்டமன்றக் கட்சி அறை, கம்யூனிஸ்டு சட்டமன்றக் கட்சி அறையின் நுழைவாயில் மற்றும் பேரவை மண்டபத்தின் பத்திரிகையாளர்கள் மேல் மாடம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருட காலம் செல்லத்தக்க வகையில் ரூ.100/– மதிப்பிலான smart card இலவசமாக இச்செயலகத்தால் வழங்கப்படும். அதில் ரூ.70/– வரை பேசிக்கொள்ளலாம். இவ்வசதியைத் தொடர்ந்து உபயோகப்படுத்த வேண்டுமாயின், உறுப்பினர்கள் தங்கள் சொந்த செலவில் ரீசார்ஜ் செய்துகொள்ள வேண்டும். ரீசார்ஜ் செய்துகொள்ள வசதியாக BSNL பணியாளர்கள் நூலகப் பிரிவு–2–ல் இருப்பார்கள். அவர்களிடம் தங்களது smart card அட்டைகளை ரீசார்ஜ் செய்துகொள்ளலாம்.

4. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இயந்திரத்தின் அச்சாணியாக விளங்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கும், நாளைய தலைமுறையை உருவாக்குவதிலே பெரும்பங்காற்றுகிற ஆசிரியர் பெருமக்களுக்கும், இந்தக் கோடையிலும் கருணை மழை பொழிந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆசிரியர்கள் என்றால் குற்றம் நீக்குபவர்கள் என்று ஒரு பொருள் உண்டு. குற்றம் நீக்குபவர்களுடைய குறையை நீக்கியிருக்கிற மனிதருள் மாமாணிக்கமாக விளங்குகிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியப் பெருமக்கள்

சமுதாயத்தின் சார்பிலும் அரசு ஊழியர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

*__திரு. பி.வி. கதிரவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழக மக்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், பெருமைப்படுத்துகின்ற வகையிலும், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக, ஆசிரியர் பெருந்தகைகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் அனைத்துத் தரப்பு ஊழியர்களுக்கும் மத்திய அரசு வழங்கியதுபோன்று 1–1–2012 ஆம் தேதியிலிருந்து 7 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு வழங்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக தமிழக அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசுதான் தமிழக அரசைப் பார்க்காமல் இருந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

*__டாக்டர் க. கிருஷ்ணசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நல்ல திட்டங்களையெல்லாம் மக்களிடத்தில் எடுத்துச் செல்வதிலே அரசு ஊழியர்களுக்கு மிகப் பெரிய பங்கு இருக்கிறது. தமிழகத்திலே ஏறக்குறைய 15 இலட்சத்திற்கு மேற்பட்ட அரசு ஊழியர்களுக்கு இன்று மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக 7 சதவிகிதம் ஊக்கத் தொகை அளித்திருக்கக்கூடிய தமிழ்நாடு முதல்வர் அவர்களை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பெருமக்கள் உட்பட தமிழக அரசு

ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் உட்பட அனைவருக்கும் மத்திய அரசாங்கத்தினுடைய விதிமுறைகளுக்கேற்ப இங்கே நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் ஊதியத்தை அதிகரித்து அறிவித்தமைக்காக மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

முற்பகல் 11–25

திரு. கே. கோபிநாத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தைப்போல மாநில அரசாங்கமும் 7 சதவிகித அகவிலைப்படி கொடுத்ததற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்கள், அரசுப் பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கக்கூடிய 7 சதவிகித அகவிலைப் படியை தமிழக அரசும் 1–1–2012 ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்து, அதுவும் 1,383.49 கோடி ரூபாய் அளவிற்கு ரொக்கமாக வழங்கப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.*

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*